## சங்கீதம் 7 (அ)

**தாவீதின் ஜெபம்:**
1. உம்மில் அடைக்கலம் புகுகிறேன் (வ 1)
2. என்னை விலக்கி இரட்சியும் (வ 1)
3. என்னைத் தப்புவியும் (வ 2)
4. என் நீதியின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும் (வ 8)
5. என் உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும் (வ 8)
6. துன்மார்க்கனுடைய பொல்லாங்கு ஒழிவதாக (வ 9)
7. நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக (வ 9)

**தாவீதின் குணம்:**
1. கைகளில் நியாயக்கேடு இல்லை (வ 3)
2. சமாதானமாயிருந்தவனுக்கு தீமைசெய்தது இல்லை (வ 4)
3. காரணமில்லாமல் சத்துருவானவனை கொள்ளையிட்டது இல்லை (வ 4)
4. நீதியுடன் நடந்தான் (வ 8)
5. உண்மையாய் இருந்தான் (வ 8)
6. (கேடகம்) பாதுகாப்புக்கு தேவனை சார்ந்தான் (வ 10)

**தாவீதின் நம்பிக்கை/உறுதி மொழி:**
1. அவருடைய நீதியின்படி துதிப்பேன் (வ 17)
2. கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன் (வ 17)

- ஏசுதாஸ் சாலொமோன்

## சங்கீதம் 7 (ஆ)

**தேவன்:**
1. நீதியுள்ளவராயிருக்கிறார் (வ 9)
2. நீதியுள்ள நியாயாதிபதி (வ 11)
3. நியாயத்தீர்ப்பை நியமித்திருக்கிறார் (வ 6)
4. ஜனங்களுக்கு நியாயஞ் செய்வார் (வ 8)
5. இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர் (வ 9)
6. செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிறவர் (வ 10)
7. பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன் (வ 11)

**பாவியின் குணம்:**
1. அக்கிரமத்தைப் பெறக் கர்ப்பவேதனைப்படுகிறான் (வ 14)
2. தீவினையைக் கர்ப்பந்தரிக்கிறான் (வ 14)
3. பொய்யைப் பெறுகிறான் (வ 14)
4. அடுத்தவனுக்கு குழியை வெட்டுகிறான் (வ 15)
5. குழியை ஆழமாக்குகிறான் (வ 15)

**பாவிக்கு வரும் தண்டனை:**

1. தான் வெட்டின குழியில் தானே விழுவான் (வ 15)
2. அவன் தீவினை அவன் தலையின்மேல் திரும்பும் (வ 16)
3. அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேல் இறங்கும் (வ 16)

- ஏசுதாஸ் சாலொமோன்